සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	**கத்தோலிக்க திருமறை I - II**	කාලය நேரம் Time: 03 මණි

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி I

- 01 தொடக்கம் 20 வரையான வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. தொடக்கநூல் 9:1-17 இல் குறிப்பிட்டுள்ள நோவாவுடன் செய்த உடன்படிக்கை உரிய மரபு,
(1) யாவே மரப (2) எலோகிம் மரபு (3) இணைச்சட்ட மரபு (4) குரு மரபு

02. கத்தோலிக்க திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்களின் எண்ணிக்கை,
(1) 27 (2) 46 (3) 39 (4) 73

03. இணைத் திருமுறை நூலில் அடங்காத நூல்,
(1) புலம்பல் (2) யூதித்து (3) பாருக்கு (4) சீராக்கின் ஞானம்

04. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பெயர்கள் மட்டும் கொண்ட விடை,
(1) மீக்காயா, மீக்கா, குல்தா (2) நாத்தான், மீக்காயா, எலியா
(3) எலியா, எலிசா, எசாயா (4) யோனா, அபியா, ஓசேயா

05. இறைவன் வாழும் இல்லமாகிய தேவாலயத்தில் பக்திப்பற்றுதலுடன் நடந்துகொள்ள வேண்டியது எமது கடமை என எடுத்துரைக்கும் இறைவாக்கினர்,
(1) எசேக்கியேல் (2) மீக்கா (3) எசாயா (4) எரேமியா

06. திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் ஆற்றிய போதனையுடன் தனது நற்செய்தியை ஆரம்பிக்கும் நற்செய்தியாளர்,
(1) மாற்கு (2) மத்தேயு (3) லூக்கா (4) யோவான்

07. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு காண்பிக்கப்படுவது,
(1) இறை சாயலாக மனிதன் படைக்கப்பட்டதன் மூலம்
(2) மனிதனுக்கு கடவுளின் உயிர் மூச்சு வழங்கப்பட்டதன் மூலம்
(3) படைப்புக்களுள் உயர்ந்த படைப்பு மனிதன் ஆனதால்
(4) அழியாத ஆன்மாவைக் கொண்டதன் மூலம்

08. தொடக்க நூலில் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிடும் பாம்பின் மூலம் அடையாளப்படுத்துவது,
(1) பெண்ணின் ஆசை (2) ஆசை நன்மை தீமையை அறியாது
(3) பாவமும் அதன் விளைவும் (4) மனிதனின் ஆசை

09. எகிப்திய மக்கள்மேல் வந்த ஏழாம், எடடாம் பெருந்துன்பங்கள்,
(1) கொசுக்கள் மற்றும் கல் மழை (2) வெட்டுக் கிளிகள் மற்றும் காரிருள்
(3) கல் மழை மற்றும் வெட்டுக் கிளிகள் (4) ஈக்கள் மற்றும் கொசுக்கள்

10. இறைவன் ஆதிப் பெற்றோருடன் செய்த உடன்படிக்கையின் பின்னனியாக அமைவது,
(1) ஆதிப் பெற்றோர் இறைவனின் குரலுக்குக் கீழ்ப்படியாமை
(2) விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்ணல்
(3) மீட்பரை இவ்வுலகிற்கு அனுப்புவதாக வாக்களித்தல்
(4) பாம்பு பெண்ணை ஏமாற்றுதல்

Past Papers Wiki

11. இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கை அடங்கும் மரபுகள் இரண்டும்
(1) D மற்றும் E (2) P மற்றும் E (3) J மற்றும் P (4) J மற்றும் D

12. இடையருக்குரிய வாழக்கை நடத்திய இஸ்ரயேல் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்களாக மாறியது,
(1) விடுதலைப் பயணத்தின் மூலம் (2) சீனாய் உடன்படிக்கை மூலம்
(3) உடன்படிக்கைப் பேழை மூலம் (4) மோசேயின் மூலம்

13. ''உங்கள் ஊதியமே போதுமென்றிருங்கள்'' என திருமுழுக்கு யோவான் கூறியது,
(1) மக்களுக்கு (2) வரிதண்டுவோருக்கு (3) பரிசேயருக்கு (4) படை வீரருக்கு

14. இயேசுவின் பகிரங்க வாழ்வு ஆரம்பமாவது,
(1) பெந்தகோஸ்து நாளில் (2) திருமுழுக்கின் பொழுது
(3) மூவித சோதனைகளை வெற்றிகொண்ட போது (4) திருமுழுக்கு யோவானின் போதனையுடன்

15. குருத்துவத்தின் முழு நிறைவு நிலை,
(1) திருத்தொண்டர் நிலை (2) திருத்தந்தை நிலை (3) ஆயர் நிலை (4) கர்தினால் நிலை

16. ''கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்'' என திருவிவிலியத்தில் குறிப்பிடப்படுவது,
(1) தொடக்கநூல் 3 (2) மாற்கு 10:9 (3) தொடக்கநூல் 1:2-8 (4) லூக்கா 4:5

17. துறவற குழுமவாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகக் கருதப்படுபவர்,
(1) தூய பக்கோமியோ (2) தூய ஜெரோம் (3) தூய அகுஸ்தினார் (4) தூய அம்புறோஸ்

18. ஆரம்பத்திலிருந்தே கிழக்கு, மேற்கு சபைகளின் இறைவழிபாட்டு மரபுகளில் நோயில் பூசுதல் அருளடையாளத்தில் இருந்த பழக்கம்,
(1) அனைவரும் ஒன்று கூடுதல் (2) திருத்தைலம் பூசுதல்
(3) திருச்சபையின் மூப்பர்களை அழைத்தல் (4) அருளடையாளங்கல் வழங்குதல்

19. விசேடமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த யுவதிகளுக்கு வளர்ச்சியும் பராமரிப்பும் வழங்கும் அருட்சகோதரிகளின் சபை,
(1) தூய தூதர்கள் கன்னியர் சபை (2) அன்புச் சகோதரிகள் சபை
(3) திருக்குடும்பக் கன்னியர் சபை (4) நல்லாயன் கன்னியர் சபை

20. கிறிஸ்தவ வாழ்வின் மையமாக விளங்குவது,
(1) குடும்பம் (2) திவ்விய நற்கருணை (3) தேவாலயம் (4) பங்கு

21. இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது,
(1) மறையை அறிவித்தல் (2) இயேசுவின் வழியை ஆயத்தம் செய்தல்
(3) பிரச்சினைகளைத் தீர்த்தல் (4) கிறிஸ்துவுக்குச் சான்று பகருதல்

22. தூய பவுல் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அறிவுரை கூறும் திருமுகம்,
(1) எபேசியர் (2) கலாத்தியர் (3) கொரிந்தியர் (4) உரோமர்

23. மரியன்னையின் பரிந்துரையோடு திருச்சபைத் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படும் புனிதத்தன்மை வாய்ந்த திருத்தூதுப் பணி,
(1) YCS அமைப்பு (2) தூய வின்சன் டி போல் சபை
(3) மரியாயின் சேனை (4) இயேசுவின் திரு இருதய சபை

24. இறை மனித உரையாடலிற்காக இயேசு எமக்கு அளித்த முழுமையான எடுத்துக்காட்டு,
(1) கெத்சமனிச் செபம் (2) இயேசு கற்பித்த செபம் (3) எட்டுப் பேறுகள் (4) மலைப் பிரசங்கம்

25. தூய பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்கள் எழுதப்பட்ட திருமுகங்களில் ஒன்று அல்லாதது,
(1) 2 தெசலோனிக்கர் (2) 1 தெசலோனிக்கர் (3) தீத்து (4) கொலோசேயர்

26. முடிவில்லாத நன்மைக்கும், முடிவில்லாத தீமைக்குமிடையே நடைபெற இருக்கும் போராட்டத்தில் நித்திய நன்மை வெற்றி பெற்று, தீய சக்திகள் யாவும் அழிக்கப்பட்டு, நம்பிக்கை கொண்டோருக்கு வளமான காலம் உதயமாகும் என்பதை முன்வைக்கும் திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பு,
(1) இறுதிக்காலம் (2) இருதன்மைகள் (3) அடையாளங்களின் பயன்பாடு (4) வெளிப்பாடு

Past Papers Wiki

27. திருச்சபையின் பிறந்த நாளாகக் கருதப்படும் நாள்,
(1) நத்தார் (2) பாஸ்கா (3) பெந்தகோஸ்து (4) விண்ணேற்பு

28. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்வதற்கு அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு யாரிடம் அனுமதி பெற்றார்?
(1) ஏரோதிடம் (2) பிலாத்துவிடம் (3) அன்னாவிடம் (4) கைப்பாசிடம்

29. வாழ்க்கையின் அர்த்தம், அதன் சிக்கல்கள், தீர்வுகள் பற்றிய கருத்தியலை எடுத்துக் காட்டும் எபிரேய ஞானத்தின் பிரிவு,
(1) குடும்பம் மற்றும் கோத்திர ஞானம் (2) அரச சபை ஞானம்
(3) அன்றாட வாழ்க்கை பற்றிய ஞானம் (4) ஆன்மீக ஞானம்

30. கி.பி. 68 இல் தூய பவுலை சிரம் வெட்டிக் கொலை செய்யக் கட்டளையிட்ட பேரரசன்,
(1) தியோக்கிலேசியான் (2) டேசியஸ் (3) நீரோ (4) திராஜன்

31. திருச்சபையின் பண்புகளில் ''கத்தோலிக்கம்" என்பது,
(1) பொதுமை (2) உலகலாவியது (3) தூய்மை (4) ஒற்றுமை

32. அநுராதபுரம் மறை மாவட்டத்தின் ஆயராக பதவி வகிப்பவர்,
(1) மேதகு நோபட் அந்திராதி ஆயர் (அ.ம.தி.) (2) மேதகு கிளிடஸ் சந்திரசிறி பெரேரா ஆயர்
(3) மேதகு ஹரல்ட் அன்டனி பெரேரா ஆயர் (4) மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆயர்

33. இக்கால கிறிஸ்தவ உலகில் மிகப்பெரிய அளவிலும் திட்டமிடப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பொது நிலையினரின் மறைத்தூதுப் பணியாக விளங்குவது,
(1) கத்தோலிக்க மறைப் பாடசாலை (2) திரு இருதய நாதர் சபை
(3) இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் (4) மரியாயின் சேனை

34. ஜேர்மனியை கிழக்கு, மேற்கு என வேறுபடுத்திய 'பேர்லின்' மதிலை உடைத்து நாட்டை ஒன்றுபடுத்துவதில் முன்னின்று செயற்பட்ட திருத்தந்தை,
(1) தூய ஆறாம் சின்னப்பர் திருத்தந்தை (2) தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் திருத்தந்தை
(3) முதலாம் பிரானசிஸ் திருத்தந்தை (4) தூய 23ஆம் அருளப்பர் திருத்தந்தை

35. அருட்பணியாளர் மைக்கல் றொட்றிகோ அடிகளார் எந்தத் துறவற சபையைச் சேர்ந்தவர்?
(1) மறைமாவட்ட அருட்பணியாளர்கள் (2) பிரான்சிஸ்கன் சபை
(3) அமல மரித் தியாகிகள் சபை (4) இயேசு சபை

36. இறைவனுக்கு ஆராதனை செய்ய மறுப்பதனால் மீறப்படும் கட்டளை,
(1) 1 ஆம் கட்டளை (2) 2 ஆம் கட்டளை (3) 3 ஆம் கட்டளை (4) 4 ஆம் கட்டளை

37. தூய பவுல் அடிகளார் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் அறிவுரை கூறும் திருமுகம்,
(1) உரோமர் (2) கொரிந்தியர் (3) கலாத்தியர் (4) எபேசியர்

38. 'தந்தையையும் தாயையும் மதித்து நட' எனும் கட்டளையை மீறும் சந்தர்ப்பம்,
(1) பொதுச் சொத்துக்களை வீணாக்குதல் (2) சமாதானத்திற்காக முன்வராமை
(3) விவாகரத்து செய்தல் (4) கெட்ட வார்த்தைகள் பேசுதல்

39. இயேசுவினதும், மரியன்னையினதும், புனிதர்களினதும் திருநாட்களில் பயன்படுத்தப்படும் நிறம்,
(1) சிவப்பு (2) வெள்ளை (3) பச்சை (4) ஊதா

40. வானவர் கீதம் (குளோரியா) பாடப்படாத காலப்பகுதி,
(1) திருவருகைக் காலம், பாஸ்காக் காலம் (2) நத்தார் காலம், பாஸ்காக் காலம்
(3) தவக்காலம், பாஸ்காக் காலம் (4) தவக்காலம், திருவருகைக் காலம்

(1x40=40 புள்ளிகள்)

பகுதி II

- முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக **ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) 1. குருக்கள் பாரம்பரியத்தில் அடங்கும் கதைகள் 02 எழுதுக.

2. இணைத் திருமுறை நூல்கள் 02 எழுதுக.

3. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகள் 02 எழுதுக.

4. எகிப்திய மக்கள்மேல் வந்த 3ஆம் மற்றும் 4ஆம் துன்பங்களை எழுதுக.

5. இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் அடங்கும் பிரதான இரு விடயங்களும் எவை?

6. இறையாட்சியின் மதிப்பீடுகளை எடுத்துக் காட்டும் உவமைகள் 02 எழுதுக.

7. தூய மத்தேயு நற்செய்தியில் 5, 6, 7 ஆம் அதிகாரங்களில் அடங்கியுள்ள மலைப்பொழிவில் இடம் பெற்ற படிப்பினைகள் 02 எழுதுக.

8. மனம் வருந்துதல் இரு வகைப்படும் அவை எவை?

9. கிறிஸ்தவ திருமணத்தின் பண்புககள் இரண்டும் எவை?

10. படைப்பைப் பற்றி இரண்டாம் கதையில் இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த பொறுப்புக்களக் இரண்டும் எவை?

(2x10=20 புள்ளிகள்)

(02) 1. இஸ்ரயேல் இறைவாக்கினரைப் பிரிக்கும் இரு பிரிவுகளும் எவை?

2. யாவே பாரம்பரியத்தில் அடங்கும் கதைகள் 03 எழுதுக.

3. இஸ்ரயேல் இறைவாக்கினரின் வாழ்க்கை மூலம் திருமுழுக்குப் பெற்ற எமக்குக் கிடைக்கும் இறைவாக்குப் பணியைச் செயற்படுத்தக் கிடைக்கும் வழிகாட்டல்கள் 05 எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

(03) 1. திருவழிபாடு என்றால் என்ன?

2. திருவழிபாட்டின் பிரதான பகுதிகள் மூன்றும் எவை?

3. உமது பங்கில் திருவழிபாட்டு வழிபாடுகளை கருத்துள்ளதாக செயற்படுத்த செய்யக்கூடிய செயல்கள் 05 எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

(04) 1. திருமுழுக்கு யோவானின் போதனையைக் கேட்ட இரு மக்கள் பிரிவினரைக் குறிப்பிடுக.

2. இயேசு செய்த புதுமைகளின் வகைகள் மூன்றைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் வீதம் எழுதுக.

3. கிறிஸ்தவ மாணவராகிய நீர் இறையாட்சியைப் பறைசாற்றச் செய்யக்கூடிய செயல்கள் ஐந்தை விளக்கமாக எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

(05) 1. சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டும் எவை?

2. பணிக் குருத்துவத்தின் நிலைகள் மூன்றையும் குறிப்பிடுக.

3. நல்ல குடும்ப வாழ்வு வாழ்வதற்கு நீர் முன்வைக்கும் நல்ல ஆலோசனைகள் 05 எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

(06) 1. தொடக்கநூல் 1:26 இல் இறைவன் மனிதனை எவ்வாறு படைத்தார்?

2. றதா, அபாத், ஷாமார் எனும் எபிரேயச் சொற்களின் பொருளை எழுதுக.

3. இக்கால சமுதாயத்தில் சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்யும் கிறிஸ்தவ கடமைகளை உயிரூட்டம் செய்ய உம்மால் செய்யக்கூடிய செயல்கள் ஐந்தை விளக்கி எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

(07) பின்வரும் தலைப்புக்களில் இரண்டைத் தெரிவு செய்து சிறு குறிப்பெழுதுக.

1. திருப்புகழ்மாலை
2. மரியன்னை பக்தி
3. உடலைச் சார்ந்த மற்றும் ஆன்மீக இரக்கச் செயல்கள்
4. திருப்பலி

(5+5=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank